செய்தி வெளியீட்டு எண் : 824 நாள் : 27.9.2010

<u>செய்தி வெளியீடு – 27.9.2010</u>

# கேளிக்கை வரிவிலக்கு கோருகின்ற தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குத் தமிழக அரசின் விளக்கம்!

தமிழில் பெயரிடப்படுகின்ற திரைப்படங்களுக்கு மட்டுமே கேளிக்கை வரி முழுமையாக விலக்களிக்கப்படும் என்று ஏற்கனவே முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ்த் திரைப்படத் துறையினரோடு கலந்தாலோசித்து அறிவித்ததற்கு இணங்க; அந்த அறிவிப்பையும், தமிழ் மொழி வளர்ச்சியையும் கவனமாகக் கருத்தில் கொண்டு தமிழ்ப் படங்கள் தயாரித்தவர்கள் கேளிக்கை வரி விலக்கைப் பெற்றுப் பயனடைந்திருக்கிறார்கள்.

இடையிலே ஒரு சிலர் தங்கள் விருப்பத்துக்குப் பெயர்களை வைத்துக் கொண்டு, அதுவும் தமிழ்தான் என்று வாதாடுவதும் – வரிவிலக்கு கோரிப் பரிந்துரை செய்வதும், தற்போது வழக்கமாகி வருவதைக் கண்டு பெரிதும் வருந்துவதோடு; தொடக்கத்தில் அரசு விதித்துள்ள நிபந்தனைப்படி, எந்த ஒரு திரைப்படமும் தமிழில் பெயரிடப்படாமல் வெளிவருமேயானால், அந்தத் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கண்டிப்பாக வழங்கப்பட மாட்டாது என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9